# வரலாற்றின் இயேசு விசுவாசத்தின் இஎசுதானா? – நிகழ்ச்சி 5

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இன்றைக்கு வரலாற்று நாயகர் இயேசுவை குறித்ததான செய்திதான் பெரும்பாலும் பரவலாக பேசப்பட்டு வருகிற செய்தியாக இருக்கிறது பல தேசிய பத்திரிக்கைகளின் கவனத்தை ஈர்த்துவருகிறது, குறிப்பாக டைம், நியூஸ்வீக்,மற்றும் US நியூஸ் மற்றும் வேல்ட் ரிபோர்ட். மேலும், இயேசு செமினாரின் அறிக்கைகளுக்கு ஊடகங்கள் அளவிற்கு அதிகமான இடமளித்து பெரிது படுத்துகிறார்கள் என நினைக்கிறன், தனிச்சையாக தேர்வு செய்யப்பட்ட புதிய ஏற்பாட்டின் வல்லுனர்கள் சிலரை கொண்டிருக்கும் சிறிய கூட்டமாக இருக்கிறது.

இன்றைக்கு வரலாற்று நாயகர் இயேசுவை பற்றிய விவாதங்களில் எழும்பும் கேள்விகளை குறித்து பார்க்க இருக்கிறோம் பொதுவாகவும் புதிய ஏற்பாட்டிற்கு வெளியிலும் இயேசுவை குறித்த பலதரப்பட்ட வரலாற்று உண்மைகள் சரித்திரத்தில் சொல்லப்படும் இயேசுதான் கிறிஸ்த விசுவாசத்தின் இயேசு என்பதை நிருபிக்கும்விதமாக இருந்து வருகிறது.

எனது விருந்தினர் உலக தரம்வாய்ந்த சித்தாந்த வாதியான Dr. ஹேபர்மாஸ், புத்தகங்களையும் எழுதியிருக்கிறார், வரலாற்று இயேசு. அவர் தமது Ph. D. யை மிக்கிகன் மாநில பல்கலைகழகத்தில் பெற்றார், இரண்டாவது டாக்டர் பட்டத்தை ஆக்ஸ்போர்டிலுள்ள இம்மானுவேல் கல்லூரியில் பெற்றார், இங்கிலார்ந்து. Dr. ஹேபர்மாஸ் லிபர்டி பல்கலைகழகத்தில் சித்தாந்தம் மற்றும் இறையியல் பாடபிரிவின் சேர்மேனாக இருக்கிறார் இவர் இயேசுவின் வாழ்கையை குறித்து நூற்றிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருக்கிறார் அவை சில பத்திரிக்கைகளிலும் வெளியிடப்பட்டு வருகிறது.

இந்த புதிய ஜான் அன்கோர்பெர்க் நிகழ்ச்சியில் இணைந்திட அழைக்கிறோம் ஏன் இயேசு ஆதிகாலத்தில் வாழ்ந்தவர்களில் அதிக வரலாற்று ஆதாரங்களை கொண்டிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** வணக்கம். இயேசு செமினாரில் சில வல்லுனர்களால் தவறான ஒரு கருத்து பரவலாக பிரசித்தி படுத்தப்பட்டு கொண்டு இருக்கிறது, அதாவது பாரம்பரிய கிறிஸ்தவர்கள் இயேசுவை விசுவாசிப்பதற்கான திடமான வலுவான வரலாற்று ஆதாரங்கள் இல்லை என்கின்றனர். ஆனால் கடந்த வாரம் Dr. ஹேபர்மஸ்

பெரும்பாலான விமர்சக வல்லுனர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிற இயேசுவை குறித்த 12 வரலாற்று ஆதாரங்களை நமக்கு விளக்கி கூறி இயேசு செமினரியினரின் கருத்து தவறு என்று காண்பித்தார். இன்றைக்கு அந்த உண்மைகளின் சாராம்சங்களை ஆராய்ந்து பார்க்க இருக்கிறோம். எனது விருந்தினரான, Dr. கேரி ஹேபர்மஸ், மிகிங்கன் மாநிலத்தில் ஒரு மாணவனாக தனது Ph.D. பட்டபடிப்பின்போது இவைகளை அறிந்துகொண்டார். இந்த உண்மைகள் நாத்திகனாக இருந்த அவரை சிலுவையின் பக்கம் ஈர்த்து கிறிஸ்துவை ஏற்றுகொள்ள செய்தது. இந்த உண்மைகளின் நிலையான தன்மையை குறித்து எடுத்துசொல்கிறார். நீங்கள் இதை கேட்கும்படி விரும்புகிறேன்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** கடந்த நிகழ்ச்சியில் இந்த உண்மைகளில் பாதிவரைகும் சொன்னால் போதும், என்பதாக பார்த்து முடித்தோம், இதை கொண்டு இயேசு மரித்தார் என்றும் மரணத்திற்கு பிறகு சீஷர்களுக்கு காட்சியளித்தார் என்றும் சொல்ல முடியும்.

என்னுடைய ஒரு தனிப்பட்ட கருத்து. இந்த உண்மைகள் அனைத்தும் முக்கியம் என்று நான் நினைக்க காரணம் – என்னுடைய வாழ்கையை பொறுத்தவரை – நா சுமார் பத்து ஆண்டுகள் இறை நம்பிக்கை இல்லாமல் இருந்தேன். கிறிஸ்தவர்களோடு விவாதிப்பேன் – ஒரு மார்க்கத்தை சேர்ந்த எல்லாரிடமும் விவாதிப்பவனாக இருந்தேன். அது யேகோவா சாட்சிக்காரராக இருந்தாலும் சரி, மோர்மன்களாக இருந்தாலும் சரி, ஆனால் பெரும்பாலும் கிறிஸ்தவர்களோடு விவாதித்து இருக்கிறேன். இந்த அடிப்படை உண்மைகளை நான் நிராகரித்திருக்கிறேன். ஒரே விஷயத்தை தொடர்ந்து சொல்லுவேன், “இதற்கு உங்ககிட்ட ஆதாரம் இல்ல. இதெல்லாம் சுவிசேஷத்தில் தான் இருக்கு. இதற்கான பதிவுகள் இல்லை, இதற்கான ஆதாரங்கள் இல்லை என்பேன்.” மாநில பல்கலைகழகத்தில் நான் மார்க்கங்களை பற்றி ஆய்வு செய்ததால அப்படிதான் யோசித்தேன். ஆனா இந்த நான்கு உண்மைகளை கொண்ட பட்டியல், நம்முடைய பட்டியலை சுருக்கி இருக்கிறோம், நீங்களும் அப்படி சிதிடலாம், கிறிஸ்தவர்களுக்கு சுவிசேஷத்தை நம்புவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் இதை நிராகரிக்கிறவர்களுக்கு, கிறிஸ்து மரித்தோரில் இருந்து எழுந்தார் என்ற உண்மை இயற்கையின் கோட்பாடுகளை தோற்கடிக்க செய்தது என்பதை நிருபிக்கும் சின்ன சின்ன உண்மைகளின் ஆதாரங்களை அவர்களுக்கு காண்பிக்க முடியும். அதற்கு இந்த பாதி பட்டியலே போதுமானது என்று நினைக்கிறேன். பொதுவாக, நாம் செய்கிற காரியம் இதுதான்.

விமர்சகர்கள் செய்யும் விதத்தையே நாம் இங்கு பார்க்கிறோம், அவர்கள் சிந்திக்கும் விதமாக சிந்திக்கிறோம், அதனால்தான், வேதாகமத்தை பழங்கால இலக்கிய புத்தகத்திற்கும் மேலானதாக கருதுகிறோம் – அதாவது, அதைவிட இது தாழ்வானது அல்ல. இது பழமையானது. இதில் பக்கங்கள் இருக்கிறது அந்த பக்கங்களில் வார்த்தைகள் இருக்கிறது. அதாவது, இது அடிப்படையான விஷயம் – வேதாகமத்தை பழங்கால இலக்கிய புத்தகமாக பார்த்தாலும் அதிலுள்ள உண்மைகளின் மையப்போருளை உங்களால் நிச்சயம் பார்க்க முடியும், என்றே சொல்வேன். இந்த அடிப்படை விஷயம் ஒன்று மட்டுமே, இயற்கையின் கோட்பாடுகளை எதிர்த்து இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தார் என்பதை நிருபித்து விவாதிப்பதாக இருக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அடுத்து, இந்த 12 உண்மைகளின் இன்னும் சில காரியங்களை பார்க்கலாம். முதலாவதாக, இயேசு சிலுவையில் தான் மரித்தாரா? குரானில், இஸ்லாமியர்கள் இயேசு சிலுவையில் மரிக்கவில்லை என்கின்றனர். வேறோ ஏதோ நடந்திருக்கிறது என்கிறார்கள். மேலும், இயற்கைவாதிகள் கூட இயேசு சிலுவையில் மரிக்கவில்லை அவர் மயங்கியிருந்தார் சுய நினைவை இழந்தார் என்று சொல்கிறார்கள். சரி, இந்த கோட்பாடுகளில் உள்ள பிரச்சனை என்னவென்றால் இயேசுவின் மரணத்தை குறித்த வரலாற்று உண்மைகளில் இந்த காரியங்கள் எதுவும் பொருந்துவது கிடையாது. Dr. கேரி ஹேபர்மஸ் ஏன் என்று விளக்குகிறார். கவனியுங்கள்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** சரி, இந்த பட்டியலில் முதலாவதாக இருப்பது இய்சு மரித்தார். இன்றைக்கு வல்லுனர்கள் இயேசுவின் மரணத்தை குறித்து கேள்வி எழுப்புவது அரிதாகிவிட்டது. இயேசு செமினாரின் நிறுவனர்கள், உதாரணமாக, சில பாடபிரிவுகளை உருவாக்கியவர்கள், இயேசுவின் வரலாற்றில் இயேசு மரித்தார் என்பது ஊர்ஜிதமான உண்மை என்று ஏன் ஜான் டாம்னிக் கிரோசன் மற்றும் மார்க்ஸ் போர்க் சொல்லுகிறார்கள்? ஏன்னா அதற்கான ஆதாரம் உறுதியானதாக இருக்கிறது.

சரி, அவற்றில் சிலவற்றை பார்க்கலாமா? முதலாவதாக, சிலுவை மரணம் என்பது மூச்சு தினறலினால் உண்டான மரணமாகும். பொதுவாக சிலுவையில் தொங்கும் போது உங்களுடைய உடல் எடை கீழ்நோக்கி இறங்க துவங்கும் அப்பா உங்களுடைய பாரம் முழுவதும் உங்க நுரையீரலை சுற்றியுள்ள தசையை இருகப்பன்னும், அப்ப என்ன நடக்குன்னா, அந்த பாரம் அதிகமாக அதிகமாக உங்களால சுவாசிக்க முடியாம போக வாய்ப்புண்டாகும், உங்களால தொடர்ந்து சரியா மூச்சு விட முடியாத நிலை உண்டாகும் அங்க மரத்து போற நிலை ஏற்பட்டு சுவாசிப்பதில் சிரமம் உண்டாகும்.

உண்மையில் 1950ஆம் ஆண்டு மேற்கு ஜெர்மனியில் ஒரு ஆய்வு நடந்தது சில ஆண்களை வைத்து அவர்களை 2''x4'' என்ற அளவில் தொங்கவிட்டனர். இந்த ஆண்கள் குறைந்தது 12 நிமிடங்களுக்குள் சுயநினைவை இழந்துவிட்டனர். சரி, சிலுவையில் தொங்கும்போது மேல இழுத்துக்கொள்ள முடியும், அந்த ஆணிகள் அல்லது கட்டப்பட்ட இறுக்கத்தை, பயன்படுத்தி மேலே இழுக்க முடியும். அப்படி மேல்நோக்கி இழுக்கும்போது நுரையீரலின் தசைகள் தளர்வடைய முடியும். ஆனா நீங்கள் கீழ்நோக்கி இறங்கும்போது ஏன்னா ரொம்ப நேரம் அப்படியே இருக்க முடியாது, கீழ்நோக்கி இர்னகும்போது சிலுவையில் தாழ்ந்து கீழ்நோக்கி இருக்கும்போது, மூச்சு திணறும். ரோம வரலாற்றாளர்கள் இதற்கு மருத்துவ பட்டம் பெற அவசியமில்லை. ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட நேரம் வரைக்கும் சிலுவையில் தொங்கிகொண்டிருந்தால் – சுமார் 30 நிமிடம் என்று வைத்துகொள்வோம் – அவன் மரித்துபோவான்.

இரண்டாவதாக, அவர்கள் இயேசுவை விலாவில் குத்தினார்கள் என்றிருக்கிறது அப்போது இரத்தமும் தண்ணீரும் வெளி வந்தது. ஒருவர் சொன்னார், சரி, அது யோவான் சுவிசேஷத்தில்தான் இருக்குது அதை ஒரு பொருட்டாக எடுக்க மாட்டோம் என்றார்."

உங்களுக்கு ஒன்றை சொல்கிறேன், பழங்கால சிலுவையில் அறையப்படுதலில், அதுல பல பதிவுகள் இருப்பதை பார்க்கலாம் கூப் டீ கிரேஸ், மரண அடிகள், அந்த கணக்கை

முடிப்பதற்கு சிலுவை மரணத்தின் இறுதியில் இதை செய்வார்கள். நமக்கே தெரியும் ஒரு மனிதனுடைய உயிரை எடுக்க மண்டையை நொறுக்குவார்கள்; ஒருவனை அம்பு வில்லும் கொண்டு பயமுறுத்தி கொன்றார்கள். இயேசுவை தவிர இன்னும் இரண்டு பேரை குறித்து யோவான் சுவிசேஷத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது அவர்கள் மரித்ததை உறுதி செய்து கொண்டார்கள். அதுமட்டுமல்ல, நமக்கு தெரிந்து இன்னொரு விதம் குருசிப்ரீக்ரியம் என்று லத்தீனில் சொல்லப்படும், மறுபடியும் மேலே எழும்ப முடியாதபடி ஒருவருடைய கால் எலும்புகளை உடைப்பார்கள். இந்த எல்லாவிதங்களிலும், தண்டனைக்கு உட்படுத்தபட்டவன், உயிரோடு இருக்க எந்தவித வாய்ப்பும் இல்லை.

எனவே முதலாவது காரணம்: சிலுவையில் கீழ்நோக்கி தொங்கிக்கொண்டு இருந்தால், நீங்கள் மரிப்பது நிச்சயம். மூச்சு திணறல் உண்டாகும்.

இரண்டாவதாக: மரண அடி. இயேசுவின் காரியத்தில் ஈட்டி அவருடைய விலாவில் குத்தப்பட்டது என்பதை பார்க்கிறோம். அமெரிக்கன் மெடிகல் அச்சொசியேஷன் இதழில் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு, இயேசுவின் மரணம் மூச்சு தினறலினால் உண்டானது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள், மாயோ கிளினிக்கின் ஆய்வாளர்களும் இணைந்தே சொல்லுகிறார்கள், அதாவது ஈட்டி அவருடைய விலாவில் குத்தப்பட்டபோது தண்ணீர் வந்தது – அவங்களுக்கு எப்படி தெரியும்? அந்த தண்ணீரானது இருதயத்தை சுற்றிலும் இருக்கிற தண்ணீராக இருந்தது என்று சொல்கிறார்கள். இயேசு மரித்திருந்தார். அப்படி இல்லாமல் இருந்திருந்தால், இந்த மரண அடி அவரை உயிரிழக்க செய்திருக்கும்.

மூன்றாவது காரணம். சரி, இது ஒருவேளை இது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம் அதனால் சிலர் யோசித்துக்கொண்டு இருக்கலாம், இங்க, என்ன தான் நடந்துகொண்டு இருக்கிறது என்று. மூன்றாவது காரியம் என்னவென்றால் நெஞ்சை உறிஞ்சும் நிலை. இது மிகவும் பிரபலமான மருத்துவ கூற்று. ஒருவரை மார்பில் குத்தும்போது அது உங்கள் சுவாச நரம்புகளை கடந்து உங்க நுரையீரலை அடையும் நிலை உண்டாகும், உயிரோடு இருப்பவராக் ஐருந்தால், ஜீவனோடு இருந்தால், உங்களுக்குள் அந்த ஓட்டையால் உண்டாகும் உறிஞ்சும் நிலையின் சத்தத்தை கேட்க்க முடியும். உங்களுக்கு தெரியுமா. அந்த சத்தத்தை கேட்பதற்கு நீங்க ஒரு மருத்துவராக இருக்க அவசியமில்லை, உயிரோடு இருந்தா போதும். இன்றைக்கு தான் ஒரு மாணவன் என்னிடம் சொன்னான் அவனை எதிர்கொண்டு வந்த ஒரு மானை அவன் சுட்டிருக்கிறான் – அதை நெஞ்சுபகுதியை பார்த்து சுடவேண்டியிருந்ததாம் – அது இதே சத்தத்தை எழுப்பியதாம் அதனால் மறுபடியும் சுடும்படி துப்பாக்கியை எடுத்தபோது அந்த சத்தம் நின்றுவிட்டது – அந்த விலங்கு மரித்துபோனது.

அவர் விலாவில் குத்தப்பட்டிருந்தால் அது இருதயம் வரைக்கும் போயிருக்க முடியாது, ஏன்னா இந்த உறிஞ்சும் நிலையின் ஓசையில் இருந்தே அதை அறிய முடியும்.

சிலுவை மரணத்தை பற்றி நாம் இப்படி யோசிப்பதற்கு இதெல்லாம் முக்கிய காரணங்களாக இருக்கிறது. மூச்சு திணறல், இருதய காயம், இது விலாவில்

குத்தப்பட்டதாக இருந்ததால் இது நெஞ்சை உறிஞ்சும் நிலையில்தான் இருந்திருக்க முடியும்.

சரி, இந்த காரியங்கள் சொல்லப்பட்டு இருக்க, இதில் ஒன்றும் வரலாற்று காரணங்கள் என்று சொல்ல முடியாது, முக்கிய காரணமாக, இயேசுவின் மரணம் பொய்யானது என்று சொல்ல முடியாது. 1935ல், ஒரு ஜெர்மானியர் டேவிட் ஸ்ட்ராஸ் என்பவர், இயேசுவின் வாழ்க்கை என்ற புத்தகம் எழுதினார். அவர் தனது எழுத்துக்களில் மிகவும் வெளிப்படையாக இருந்தபடியால் அவரை இந்த போதனையை கைவிடும்படி லிபரல் பல்கலைகழகம் கண்டித்து எச்சரித்தது. இயேசுவை குறித்த அவரது கண்ணோட்டத்திற்காக அவர் வாழ்நாள் முழுவதும் பெரும் பங்கை செலுத்த வேண்டியிருந்தது. அவருடைய அந்த பிரபலமான எழுத்துக்களில் அவர் விமர்சித்து சொல்லும்போது இயேசு மரிக்கவில்லை என்று விசுவாசிப்பவர்கள் உண்டு என்று சொல்லியிருந்தார். சொல்லப்போனா, இந்த கோட்பாடு ஆயிரத்து எட்நூத்தி முப்பத்தி ஐந்து வரை இருந்தது – இயேசு மரிக்கவில்லை.

அவர் சொல்லுகிறார்: இந்த கோட்பாடுகளில் சில பிரச்சனைகள் இருக்கிறது. இது தனக்கு தானே முரண்பாடாக இருக்கிறது. இயேசு ஒருவேளை சிலுவை மரித்திருக்கலாம். அதை பற்றி கவலை வேண்டாம். அப்படி நடக்கல. ஒருவேளை கல்லறையில் வைக்கப்பட்டு இருக்கலாமோ. கவலையே வேண்டாம். அப்படியும் நடக்கவில்லை.

நிச்சயம் கல்லறையின் கல் தானாக முரண்டிருக்காது. நிறைய ஆண்கள் உதவியிருபார்கள். மலையின் மேல இருக்கும்போது ஒன்றும் செய்ய இயலாதவர் எப்படி இந்த கல்லறையின் கல்லை புரட்டி இருக்க முடியும். அவர் பெலவீனமாக இருந்திருப்பாரே. அதை பற்றிய கவலைகள் வேண்டாம். அவர் கல்லை புரட்டி இருப்பார்.

நடந்தார், எவ்வளவு தூரம்? எனக்கு தெரியாது. அரை மையில் தூரம், அதற்கும்மேலா, ஆணிகள் கடாவப்பட்ட பாதங்களில் சீஷர்கள் விளுந்தார்களோ!

மேலும் ஸ்ட்ராஸ் கூறுகிறார், “இதெல்லாம் பிரச்சனையாக இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? இதல்லாம் பெரிய பிரச்சனையே இல்ல. மிகப்பெரிய பிரச்சனை என்னவென்றால் இயேசு மரிக்கவே இல்லை என்று சொல்வதுதான். சீஷர்கள் இருக்கும் வீட்டிற்கு வந்து அவர் கதைவரை தட்டுகிறார். அவர்கள் கதவினிடத்திற்கு வந்தபோது, அவர் எப்படி தோன்றியிருப்பார்? அவருடைய சாயல் எப்படி பட்டதாக இருந்திருக்கும்? மங்கலாக இருந்திருக்கும். வியர்த்து வடிந்திருக்கும். விலாவின் காயம் மறுபடியும் திறந்திருக்கலாம். அவர் காயப்பட்டு இருக்கலாம். அவர் தலை இன்னும் கழுவப்பட வில்லை. வியர்வை, தலைமுடி முழுவதும் காய்ந்த இரத்தம். நொண்டி நொண்டி நடந்திருப்பார். அவர் அவர்களை பார்த்து, நான், மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுவேன் என்று சொல்லியிருந்தேனே என்றிருப்பார்.”

ஸ்ட்ராஸ் சொல்கிறார், “இங்கு நடப்பதை கவனியுங்கள். அவர் உயிரோடு இருக்கிறார், ஆமா. உயிர்த்தேளுந்தாரா, இல்லை. அவங்க என்ன செய்திருபாங்க தெரியுமா. பேதுரு, அவருக்கு நாற்காலியை போட்டிருப்பான். அந்திரேயா, தண்ணீ கொண்டு வந்து தந்திருப்பான், யோவான், மருத்துவரை அழைத்திருப்பான். அவங்க எல்லாரும்,

ஆண்டவருக்கு நன்றி, இவர் சுகமாகிவிட்டார், அல்லது சுகபெற்று வருகிறார்  இவர் உயிரோடு இருக்கிறார் என்றிருப்பார்கள். ஆனா அவங்க வேறு எதையும் சொல்லல, தேவனுக்கு நன்றி இவர் உயிரோடு எழும்ப போறாருன்னு சொல்லல.' அதனால பிலிப்பு ஏதோவொரு வனாந்திரத்துல சொன்னது நடக்குன்னு நினைக்க வேண்டாம், புதிய ஏற்பாட்டில் சொன்னது போல "ஒருநாள், எனக்கும் அவருடைய உயிர்த்தெழுந்த சரீரம் போன்ற சரீரம் கிடைக்கும். நோ தேங்க்ஸ். நன்றி. என்னோட சரீரத்தை நான் வைத்துகொள்கிறேன். இயேசு அவரோட சரீரத்தை அவரே வைத்துக்கொள்ளட்டும் என்றார்."

இப்ப, இதுதான் ஸ்ட்ராஸின் கண்ணோட்டம். இதைதான் இங்கு அவர் சொல்லியிருக்கிறார், இதை நாம் அதிகம் கவனிப்பது இல்லை: உயிரோடு இருக்கிறார், ஆமா. உயிர்த்தெழுந்தார். இல்லை. இங்க பிரச்சனை என்ன? அவர் உயிரோடு எழுந்தார் என்பதை சீஷர்கள் நம்பாவிட்டார், புதிய ஏற்பாட்டு சபை உண்டாகியிருக்க எந்தவித வாய்ப்பும் இல்லை. பிரசங்கிக்க எந்த அடித்தளமும் இருக்காது. அவர் உயிரோடு எழுந்தார் என்பதை அவர்கள விசுவாசிக்க வேண்டியிருந்தது. மற்ற சூவன் கோட்பாடுகள் இதை சொல்ல தவறிவிட்டன.

தீர்வு: மூச்சு திணறல், இருதயம், விலா, ஸ்ட்ராஸ் விமர்சனம். இன்னும் பல விவாதங்கள் இருக்கிறது. பவுலினுடைய கருத்துக்களை என்ன செய்வீர்கள்? யாக்கோபின் சாட்சியை என்ன செய்வீர்கள்? இங்குள்ள குழுவோடு சமரசமான நிலையில் இதை எப்படி இணைப்பீர்கள்? இதிலிருந்து பெறப்படும் ஒரு முக்கிய தீர்வு இயேசு ரோமர்களால் சிலுவையில் அறியப்பட்டதினால் தான்  மரித்தார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, நான் Dr. ஹேபர்மசிடம் ஹக் ஸ்கான் பில்ட் புத்தகத்தின் ஒரு வார்த்தையை விளக்க சொன்னேன், :தி பாஸ்ஓவர் ப்ளாட்" அதாவது இயேசுவுக்கு சிலுவையில் இருந்தபோது போதை வஸ்து கொடுத்து செத்தவரைபோல தோன்றும் படி செய்தார்கள் என்ற கருத்து. அதற்கு Dr. ஹேபர்மசின் பதிலை கேளுங்கள்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** சரி, இதனை நாம் 1965ம் ஆண்டின் சிறந்த விற்பனையில் இருந்த புத்தகத்தோடு ஒப்பிடும்போது என்ன சொல்வோம், தி பாஸ் ஓவர் பிளாட்? அதன் ஆசிரியர் இயேசு சிலுவையில் மரிக்கவில்லை என்று கூறுகிறார்.. அதாவது, அநேகற்கு இதை நினைவில் இருக்காது, ஆனா அவர் சொன்னார், இது என்னுடைய யூகம்தான், இதுதான் நடந்து என்று நான் சொல்லவில்லை என்கிறார்." அதுமட்டுமல்ல அவர், "ஒருவேளை இயேசு சிலுவையில் மரிக்காமல் இருந்திருக்கலாமே?

இவர், மூச்சு திணறல் என்பதற்கு எதிராக சொல்கிறார். இருதயம் காயத்திற்கு எதிராக சொல்கிறார். இவர் விலாவில் குத்தப்பட்டதற்கு எதிராக சொல்கிறார். இவர் ஸ்ட்ராஸ் விமர்சனத்திற்கு எதிராக சொல்கிறார். அதனால் இந்த தி பாஸ் ஓவர் பிளாட்ல் காணப்படும் கோட்பாடுகளை விமர்சகர்கள் பெரிதும் புறக்கணிக்கிறார்கள். உண்மையில், நிறைய விஷயங்களில் வல்லுனர்கள் சொல்லியிருப்பதை பார்த்திருக்கிறேன், அதாவது, "இது எங்களுடைய செயல் அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள், ஏன்னா முக்கியமான விஷயம் என்னன்னா, இந்த காரியங்களை சுலபமாக எடுத்துகொள்ள முடியாது.

உண்மையா, உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். டேவிட் ஸ்ட்ராஸ் விமர்சனத்திற்கு பிறகு 1835, ஆல்பர்ட் ஸ்கீவீட்சரின் பிரபலாமான புத்தகம் வரலாற்று இயேசுவை குறித்த கேள்விகள் வந்தது, 1840 பிறகு எந்த வல்லுனர்களும் சுவான் கோட்ப்பாட்டை பற்றிக்கொள்ள வில்லை என்று கூறுகிறார். வரலாற்று ரீதியாக் பார்க்கும்போது, ஸ்ட்ராஸ் விமர்சனம் மட்டும் இருந்தது, புன்நை மட்டும் விட்டுவிட்டா, ஸ்ட்ராஸ் விமர்சனம் மட்டமே இந்த சூன் கோட்பாட்டை நிராகரிக்க வைத்தது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சியை முதன்முறையாக பார்ப்பவர்களா நீங்கள், Dr. கேரி ஹேபர்மஸ் இன்றைக்கு பெரும்பாலான விமர்சக வல்லுனர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் இயேசுவை குறித்த 12 வரலாற்று உண்மைகளை விளக்கி கொண்டு இருக்கிறார். இந்த 12 உண்மைகளின் முக்கியத்துவம் என்னவென்றால் இவைதான் இயேசுவின் மேல் பாரம்பரியமாக கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கும் விசுவாசத்திற்கான அஸ்திபாரம், இதை இயேசு செமினாரின் மக்கள் மறுக்கிறார்கள், எனவே இதனையும் இயேசுவின் உயிர்த்தெழுதலை இல்லை என விளக்கும் இயற்கையின் கோட்பாடுகளையும் இவை தகர்க்கிறது. நாம் பார்க்க இருக்கிற அடுத்த உண்மை ஆதாரம் இயேசு அடக்கம் பண்ணப்பட்டார். இது ஏன் அவசியமானதாக இருக்கிறது? கவனியுங்கள்:

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** இப்ப, கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது, பவுல் சொல்வது போல, இதுதான் பிரதானமானது, அடுத்து எங்க போக போகிறோம்?

இயேசு சிலுவையில் மரித்தார், இதை, தான், தல்மூதும் நமக்கு சொல்லுகிறார். இதற்கு அடுத்தது அவர், அடக்கம்பன்னப்பட்டார் என்று இருக்கிறது.

இப்ப, இதை அநேகர் கேள்வி கேட்பது கிடையாது. இது பொதுவாக நடக்கிற சம்பவம் தான். மரித்தவர்கள் அடக்கம் பண்ணப்படுகிறார்கள். புதிய ஏற்பாட்டின் ஆவங்களில் இருந்து பார்க்கும் போது அடக்கம் பண்ணப்படுதலில் இருந்து நாம் என்ன கற்றுகொள்கிறோம்.

முதலாவதாக, இன்றைக்கும் பெரும்பாலம் விமர்சகர்கள் பவுலின் கூற்றுகளை எடுத்துகொள்வதை போல சுவிசேஷத்தை எடுத்துகொள்வது இல்லை, இருந்தாலும் இப்போது நாம் இந்த நான்கு சுவிசேஷங்களும் இயேசுவை அடக்கம் பண்ணின கல்லறை காலியாக இருந்தது என்று சொல்வது எடுத்துகொள்ளலாம். ஆல்ரைட்?

இதற்கு விமர்சகர்களின் பதில், “ எனக்கு சுவிசேஷங்களை பிடிக்காது”.

இருந்தாலும் நம்முடைய கருத்து, இரண்டாவதாக, விமர்சகருக்கு சுவிசேஷங்கள் பிடிக்காது என்பதனால், சுவிசேஷத்தை விளக்க அவசியமில்லை என்று இல்லை. உங்களுக்கு வேண்டியது எல்லாம், இரண்டாவது, ஆதாரம் இயேசு வேறு எங்கேயோ அடக்கம் பண்ணப்பட்டார். இதுதான் திறவுகோல் காரியம். அவர் வேறு எங்கோ அடக்கம் பண்ணப்பட்டதற்கு ஆதாரம் இருக்கிறது. யாரும் எடுத்துகொண்டு போகவுல்லை. ஏன்? ஆரம்ப காலத்தில் அவர் அடக்கம் பண்ணப்பட்ட இடத்தை பற்றிய ஆதாரங்கள் சொல்லப்படவில்லை. அதனால உங்க இஷ்டப்படி, இப்படி இருக்கலாம்,

அப்படியிருக்கலாம், என்று சொல்லியிருந்தாலும் அவிசுவாசிக்ளுகும் இந்த கேள்வி இருந்தது, அதையேதான் கிறிஸ்தவர்களிடமும் கேட்க்கபடுகிறது. சுவிசேஷங்கள் சொல்வது போல அவர் எங்கு அடக்கம் பண்ணப்பட்டார் என்ற தகவல் வேறு எங்கு இருக்கிறது.

மூன்றாவதாக. அநேகர் இந்த குறிப்பை முன்வைக்கிறார்கள் யோசேப்பு மற்றும் நிக்கொதேமு, இந்த பெயர்களையும் அடக்கம் பண்ணப்பட்ட  நிகழ்வுகளை சேர்க்காமல் இருப்பது கடினம் ஏன்னா இவங்களும் அதுல முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.  ஆனா இவங்க உண்மையான மனிதர்களாக இல்லாமல் இருந்திருந்தால் எதற்காக இவர்களுடைய பெயர்கள் சேர்க்கப்பட வேண்டும்? விசுவாசிக்கிறவர்கள் உண்மையான காரியங்களை சொல்வார்கள் என்பதுதான் அர்த்தமுள்ளதாக இருக்கிறது.

அதை தொடர்ந்து, ஆதிகால எழுத்துக்கள் இருக்கிறது. சரி, இதை ஏற்கனவே சொல்லியிருக்கிறோம் – அறிக்கைகள். 1 கொரிந்தியர் 15. நினைவிருக்கட்டும், மூன்று ஹோட்டி – பின்பு, பின்பு, பின்பு  என்ற வார்த்தை. பவுல் சொல்கிறார், “அவர் வேதவாக்கியங்களின் படி நம் பாவங்களுக்காக மரித்து, பின்பு  அடக்கம் பண்ணப்பட்டு பின்பு, உயிரோடு எழுந்து,பின்பு அவர் தரிசனமானார்.” இப்ப, இந்த ஆதிகால முறைப்படி பார்க்கும்போது, பவுலினால் சொல்லப்படாத, பவுலுக்கு முந்தைய எழுத்துக்கள். ஒருவர் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிரோடு எழுந்து, தரிசனமானாம், மிகப்பெரிய தாக்கம் உன்காகும், இறங்கினவரே ஏறினவராகவும் இருக்கிறாரே. பவுலும் இங்கு அடக்கம் பண்ணப்படுதல் சம்பவித்தது என்கிறார், ஆனா அவர் அதை தாண்டி சிலவற்றை சொல்கிறார். அதை நாம் காலியான கல்லறையில் பார்க்கலாம். ஆனா இங்க 1 கொரிந்தியர் 15 கூறுகிறது, “அடக்கம்பண்ணப்பட்டார்” இதற்கு முந்தைய ஆதாரங்களும் இருக்கத்தான் செய்கிறது.

விவாதத்திற்கு சிறந்த இன்னொரு பகுதி அப்போஸ்தலர் 13:29. ஏன்? ஏன்னா சில விமர்சக வல்லுனர்கள் இதற்கு ஒப்புகொள்கிறார்கள், நான் முன்பு சொன்னதுபோல, அப்போஸ்தலர் 13 சிறு சிறு அறிக்கைகளை உள்ளடக்கி உள்ளது – விளக்கப்படும் இறையியல் கூற்றுகள். அதில் அப்போஸ்தலர் 13:29ல் இந்த பகுதியானது அவர் அடக்கம்பண்ணப்பட்டார் என்று கூறுகிறது. இரண்டு பகுதிகள் இருக்கிறது, இரண்டு ஆதிகால எழுத்துகளின் விவாதங்கள். சுவிசேஷங்கள் இருக்கறது. யோசேப்பு மற்றும் நிக்கொதேமுவுக்கு எதிரான ஆதாரங்கள் இல்லை, அடுத்து 1 கொரிந்தியர் 15, அப்போஸ்தலர் 13, மேலும் இறுதியாக, அவர் எருசலேமில் அடக்கம் பண்ணப்படாமல் இருந்திருந்தால் அங்கே அவருடைய அடக்கத்தை பற்றி பிரகடனம் செய்வதில் அர்த்தம் இருந்திருக்காது. ஏன்னா உலகத்திலேய அந்த இடத்தில் தான் மறுப்பு தெரிவிக்கப்பட்டு இருக்கவேண்டும். அவங்களே சரீரத்தை எடுத்துகொண்டு இல்லை என்றிருக்கலாம். அவர் அங்கே இல்லை, அவர் கதை முடிந்தது.” எருசலேம் தான் இறுதி இடமாக இருந்தது. அதனால அடக்கம் பண்ணப்பட்டதை பற்றி சுவிசேஷங்களும் பவுலும் சொல்லுகிற காரியங்களும் ஆதிகால ஆவணங்களும் முற்றிலும் உண்மை என்பதை நிரூபிக்க அரை டசன் ஆதாரங்கள் நம்மிடம் இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நாம் பார்க்க இருக்கிற அடுத்த உண்மை காலியான கல்லறை. இதுவும், கூட, வரலாற்று உண்மைதான் இது ஒரு கேள்வியை முன்வைக்கிறது: இயேசுவின் சரீரத்திற்கு என்ன ஆனது? Dr. ஹேபர்மஸ் விளக்குகிறார்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** ஒகே. அடுத்த படிக்கு கடந்து செல்லலாம். அவர் மரித்தார். அடக்கம் பண்ணப்பட்டார். கல்லறையில் என்ன நடந்தது? சரி, கிறிஸ்தவர்கள் சொல்கிறார்கள் அவர் உயிர்த்தேளுந்தால், ஆனால் அடக்கத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் கல்லறை காலியானது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இயேசு அதை அப்படியே விட்டுவிட்டு சென்றுவிட்டார். இதை நம்புவதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கிறதா? இங்கவும், ஒரு விஷயத்தை முன்வைக்க விரும்புகிறேன், நான்கு சுவிசேஷங்களிலும் காலியான கல்லறை பதிவுசெய்யப்பட்டு இருக்கிறது. இப்ப விமர்சகர்கள் என்ன சொல்றாங்க, "நாங்க சொன்னோமில்ல, எங்களுக்கு சுவிசேஷம் பிடிக்காது."

காலியான கல்லறையை குறித்த ஆதிகால சுவிசேஷக பதிவுகளை ஆதரிக்க ஏதாவது இருக்கிறது? உங்களுக்கு நா மிகப்பெரிய மூன்று ஆதாரங்களை இப்போது சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, காலியான கல்லறை முதலில் கண்ணார கண்ட சாட்சி பெண்கள். ஏன் இது முக்கியமானது? ஏன்னா கட்டுகதைகளை உண்டாக்க விரும்பினால் – நினைவிருக்கட்டும் நம்முடைய மண்டே மார்னிங் குவார்டர் கருத்துப்படி – நீங்க ஒரு காரியத்தை உருவாக்கி சொல்லன்னுன்னா, அதாவது ஆதிகாலங்களில் கிறிஸ்தவர்கள் ஒரு காரியத்தை சொல்ல வேண்டும் என்று விரும்பினால், பெண்களை முதல் சாட்சிகளாக நிறுத்தி இருக்க மாட்டார்கள். ஏன்? ஏன்னா முதல் நூற்றாண்டில் பெண்கள் நியாய சங்கத்திற்கு முன்பாக அனுமதிக்கப்பட வில்லை. அவர்கள் உண்மையை சொல்வார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது இல்லை. அப்படிதான் அவர்கள் கருதப்பட்டார்கள். அவங்களால சாட்சியிட முடியாது. அதனால நியாய சங்கத்திற்கு முன்பு நிற்க முடியாதவர்களின் பேச்சை ஏன் கேட்க வேண்டும்? அதாவது குழந்தைகளை உங்களுடைய முக்கிய சாட்சியாக நிறுத்துவதற்கு ஒப்பாக இருக்கிறது. ஏன் அப்படி சொல்றேன்னா, "அவங்கதா பார்த்தது. கல்லறை காலியாக இருக்கு. அந்த பெண் அவரை பார்த்தால், இருந்தாலும், அங்க, முதல்ல அந்த பெண் காலியான கல்லறையைதான் பார்க்கிறாள், சரியா?

இரண்டாவது கரணம்: யூதர்கள் கல்லறை காலியாக இருப்பதை விசுவாசித்தார்கள். சரி, வரலாற்றில் ஒரு உண்மை இருக்கிறது, வரலாற்றில் ஒருவிதம் இருக்கிறது,அதாவது, ஒரு விமர்சகர் ஒரு காரியத்தை ஒப்புகொண்டால், அது அதிகபட்சம் உண்மையாகத்தான் இருக்கும். ஒருவரை எதிர்த்து நின்று இவன் இப்படி பட்டவன் அவன் அப்படிபட்டவன் இது தவறு அது தவறு என்று பல காரணங்களை முன்வைத்தாலும், அவன் தைரியமான நபராக இருந்தாலும், நிச்சயம் தைரியமாக, எதிர்த்து நிற்க வாய்ப்பு இருக்கிறது. சீஷர்களும் கல்லறை காலியாக இருக்க்ரியது என்றனர். இப்ப, அவர்கள் சீஷர்கள்தான் சரீரத்தை திருடியதாக நினைத்தார்கள், உண்மையில் எந்த விமர்சகர்களும், 200 ஆண்டுகளுக்கு மேல் இந்த காரியத்தை நிரூபிக்க முடியவில்லை ஏன்னா பொய்யர்கள்

இரத்த சாட்சியாக மரிக்க மாட்டார்கள்; சீஷர்களுடைய மாற்றத்தையும் அவர்களுடைய திடமான விசுவாசத்தையும் உங்கள் விவரிக்கவே முடியாது. சரீரத்தை திருடிவிட்டு போய் சொல்லியிருந்தால், யாக்கோபை குறித்து விளக்கம் கொடுக்க முடியாதே; பவுலின் மாற்றத்திற்கு அர்த்தம் இருந்திருக்காது. இந்த காரியங்கள் எல்லாம் மிகப்பெரிய பின்னணியை கொண்டு இருக்கிறது. ஆனா இங்க மீதமிருந்தது என்ன? சீஷர்கள் சரீரத்தை திருடி சென்றிருந்தால், யூதர்கள் சொல்வது போல இருந்தால், அந்த கோட்பாடு எந்த அர்த்தத்தையும் கொடுக்காது, இங்க காலியான கல்லறை இருக்கிறது. இங்க யூத தலைவர்கள் எதையாவது சொல்லி வாயை அடைக்க முயலுகிறார்கள்... ஏதாவது விளக்கம் கொடுத்து தப்பிக்க நினைக்கிறார்கள்: சரீரம் காணவில்லை என்கிறார்கள்.

மூன்றாவது விவாதம். கொஞ்சம் முன்னால நான் சொன்ன ஆதிகால எழுத்தக்கள் – 1 கொரிந்தியர் 15. பவுலின் பட்டியல், இங்கயும், அவர்: நம் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம்பண்ணப்பட்டார், உயிரோடெழுந்தார், தரிசனமானார். சரி, ஒருநபர் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிரோடு எழுந்து, தரிசனமாகிறார், என்றால் என்ன? அந்த சரீரம் அங்க இல்லை என்று அர்த்தம். இறங்கி சென்றது மீண்டும் ஏறி வந்திருக்கிறது. இதற்கு வலுவான ஆதாரங்கள் இருக்கிறது.... 1 கொரிந்தியர் 15ல் அடக்கம் பண்ணப்பட்டதற்கான அறிக்கையும் அதற்கு அடுத்த படியை உறுதிபடுத்தும் வாக்கியமும் இருக்கிறது, கல்லறை காலியாக இருந்தது.

இதை மற்ற ஆவணங்களில் இருந்தும் பெற முடியும், அதையும் சொல்லியிருக்கிறேன். மேலும், எருசலேம் – அடக்கத்தை போல தான். எருசலேம் தான் காலியான கல்லறையை பற்றி சொல்லக்கூடிய ஒரே இடம் ஏன்னா சிலர் சொல்லுவாங்க, “ஏ, இல்ல, கல்லறை காலியா இல்ல” அப்படிபட்டவங்க இங்க வந்து பார்த்தா நல்லா இருக்கும்.

அப்போஸ்தலர் 13:29, இன்னொரு ஆரம்ப காலத்தின் பகுதி, கூறுகிறது அவர் அடக்கப்பண்ணப்பட்டார் அந்த கல்லறை காலியாக இருந்தது. இங்க இன்னும் சில ஆதாரங்கள் இருக்கிறது இருந்தாலும் பெண்களின் சாட்சி எனக்கு பிடிக்கும், யூதர்கள் காலியான கல்லறையை ஒப்புக்கொண்டதும் எனக்கு பிடிக்கும், மேலும் பவுல் 1 கொரிந்தியர் 15ல் சொல்லிய அறிக்கையும் எனக்கு பிடிக்கும். இது மூன்றும் கடினமான குறிப்புகள்தான், இருந்தாலும், சுவிசேஷங்கள் சொல்லுகிறபடி, காலியான கல்லறையை குறித்து பல உண்மையான தகவல்கள் நிறைய இருக்கிறது.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இன்றைக்கு இயேசுவை குறித்த மூன்று வரலாற்று உண்மைகளை பார்த்திருக்கிறோம் – முதலாவது, அவர் சிலுவையில் தான் மரித்தார். இரண்டாவது, அடக்கம் பண்ணப்பட்டார், மூன்றாவது, அவருடைய கல்லறை காலியாக இருந்தது. அடுத்த வாரம் இயேசு மரித்து அடக்கம்பண்ணப்பட்டதை பார்த்த சீஷர்கள் அதே இயேசு தங்களுக்கு காட்சியளித்தார் என்று நம்பினார்கள் என்பதை பார்க்க இருக்கிறோம். இந்த உண்மைக்கு என்ன ஆதாரம்? குழுவிற்கு உண்டான பிரம்மையா? தரிசனமா? அல்லது இயேசுதான் அவர்களுக்கு தோன்றினாரா? அடுத்த வாரம் இந்த கேள்விகளுக்கான விடைகளை பார்க்கலாம். ஆனா இப்போது Dr. ஹேபர்மஸ்

இன்றைக்கு நாம் பார்த்தவைகளில் முக்கியமானவைகளை சுருக்கமாக சொல்ல இருக்கிறார்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்:** இதை கொண்டு நாம் என்ன செய்ய போகிறோம்? முதலாவது, நான் சொன்னேன், விமர்சகர்கள் உங்களுக்கு ஒருசில உண்மைகளை கொடுக்க கூடும். அதற்கு நான், “இருக்கட்டும். என்னிடம் பன்னிரண்டு இருக்கிறது என்றேன்.” பன்னிரண்டு ரொம்ப அதிகம் என்று நினைக்கிறவர்கள் – என்னை நம்புங்கள், வெகு சில எழுத்தாளர்கள் தான் இதனை பயன்படுத்துகிறார்கள் – இந்த நான்கு மட்டுமே போதும். மேலும் நான் சொன்னதுபோல அடிப்படையான காரியங்களே யார் மறித்ததோ அவர்தான் உயிரோடு எழும்பினார் என்பதை வெளிபடுத்துகிறது. இந்த இரண்டு நிகழ்வுகளுக்கு இடையில் அடக்கம் பண்ணப்படுதலும் காலியான கல்லறையும் இருக்கிறது. இவை இரண்டையும் நம்புவதற்கு அரை டசன் ஆதாரங்கள் என்னிடம் இருக்கிறது.

இதுவரைக்கும் நாம பார்க்காத காரியம் அவர் காட்சியளித்து தரிசனமானதுதான், இதுவும் முக்கியமான ஆதாரமாக இருக்கிறது. அதற்கு காரணம், விமர்சகர்களின் சமுதாயத்தினர் சீஷர்கள் தாங்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்ததாக விசுவாசித்தனர் என்பதை ஏற்றுகொள்ள ஆர்வம் காட்டுகிறார்கள், இதுதான் உயிர்த்தெழுதலுக்கு மிகப்பெரிய ஆதாரமாக கருதப்படுகிறது.

****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.